இந்த நிறுவனத்தை ஒரு கூட்டமைப்பாகப் பதிவு செய்யவும் ஊழியரின் நிலையை ஒழுங்குபடுத்தி நிரந்தரமானதாக்கவும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: அங்கே பணியாற்றக் கூடியவர்கள் மத்திய அரசின் சிப்பந்திகளா அல்லது வேறு சிப்பந்திகளா என்று தெளிவாக இல்லாத நிலையில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு தங்களுடைய செல்வாக்கைப் பயன் படுத்தி மத்திய அரசிற்கு எழுதி இவர்களை மத்திய அரசு ஊழியர் களாக நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(5) அறிக்கை அளித்தல்

தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

MR. SPEAKER : Thiru Vezhavendan will present the Report of the Committee on Estimates.

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I have the honour to present the Foudth Report of the Committee on Estimates on Industrial Deveuoyment Corporation.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1971).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்டமுன் வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழி கிறேன்.

MR. SPEAKER : Thiruvalargal K. T.K. Thangamani, H. V. Hande, A. R. Marimuthu and A. Subramaniam, have given notice of amendments. They are all identical amendments. I allow the amendment of Thiru K. T. K. Thangamani who can now move it.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move :

"That the Tamil Nadu Agricultural Income-Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971), be referred to a Select Commmittee consisting of 21 Members of the Assembly (names to be furnished later).

The amendment was duly seconded.

---

*10—7—71-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.